**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.163/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.15** |
| **Name** | **:** | **திரு. வஜ்ஜிரவேலு** |
| **Father's Name** | **:** | **வெங்கடேசன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1 முதல் 6 எதிரிகள் ஆஜர். 7 முதல் 10 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 4.8.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. சுரேஷ் இறந்தது தெரியும். கேள்விப்பட்டேன்.**

**சுரேஷ் இறந்து 5,6 நாட்கள் கழித்து நானும் இளையபாரதியும் ஒரு வேலையாக புதுப்பாளையம் காலனிக்கு சென்றோம். முத்துமாரியம்மன் கோயில் காந்தி வீட்டிடம் போலிசை பார்த்தோம். காந்தி வீட்டிற்கு பின்புறம் வண்டி இருப்பதாக அங்கிருந்த இளையபாரதி நம்ப ஊர் வண்டி இருப்பதாக**

சொன்னார். வண்டி சம்பந்தமாக போலிசார் என்னிடம் மூன்று கையொப்பம் பெற்றார்கள். கையொப்பம் எதற்காக போட்டேன் என்றால் எங்கள் ஊர் வண்டி எடுப்பதற்காக.

என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் (ஒப்புதல் வாக்குமூலங்கள்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. முதல் கையொப்பம் இளையபாரதியுடையது. அந்த ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.20 முதல் 23. என்னிடம் காட்டப்படும் மற்றொரு ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. முதல் கையொப்பம் இளையபாரதியுடையது. இந்த கையொப்பம் வண்டிக்காக போடப்பட்டது. என் முன்னிலையிலும் இளையபாரதி முன்னிலையிலும் வண்டி எடுக்கப்பட்டது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை

நானும் இளையபாரதியும் 27.1.2017 அன்று தூசி காவல்நிலையத்திற்கு சென்றிருந்தோம் என்றால் சென்றோம். காவல்நிலையத்தில் தங்கராஜ் மகன்கள் ஞானவேல், தனசேகரன், குமரவேல், இளையவேல் ஆகியோர்களை பார்த்தேன். போலிசார் என்ன பேசிக்கொண்டார்கள் என்று தெரியாது. நான் உள்ளே போகும்போது நான்கு பேரும் தான் கொலை செய்ததாக போலிசார் சொன்னார்கள். நான் உள்ளே சென்று பார்க்கவில்லை. இளையபாரதி தான் சென்று பார்த்தார். நான் காவல்நிலையத்தில் இருந்த எதிரிகளிடம் போய் இதுகுறித்து கேட்டேனா என்றால் நான் எதிரிகளை பார்க்கவில்லை. எதிரிகள்

வெளியில் வரும்போது தான் பார்த்தேன். எப்போது பார்த்தேன் என்றால் பெயிலில் வந்தபிறகு பார்த்தேன்.

என்னை போலிசார் விசாரித்தபோது நானும் இளையபாரதியும் காவல்நிலையத்திற்கு சென்றபோது காவல்நிலையத்தில் ஞானவேல், தனசேகரன், குமரவேல், இளையவேல் ஆகியோர் இருந்தனர் என்றாலும், போலிசார் மேற்சொன்ன நபர்களை விசாரித்தபோது மேற்படி எதிரிகள் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, அதன் அடிப்படையில் தான் இருசக்கர வாகனம் கைப்பற்றப்பட்டது அதற்காக தான் நானும் இளையபாரதியும் கையொப்பம் போட்டோம் என்றாலும், எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் வண்டியை எடுக்கும்போது இருந்தது உண்மை. எதிரிகள் குற்றவாளிகள் என்று சொன்னது தெரியும். இருவருமே எங்கள் ஊர்க்காரர்கள் தான். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கையொப்பம் அனைத்தும் எங்கு வைத்து போட்டேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். நான் கையொப்பம் போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் இளையபாரதி படித்து காண்பித்தார். அவர் போட்ட பிறகு நான் போட்டேன். காந்தி வீடு என்ற வீட்டில் காந்தி இருந்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. காந்தி வீட்டில் உள்ளவர்களும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். ஊர்க்காரர்களிடம் போலிசார் கையொப்பம் பெற்றார்களா என்றால் பெறவில்லை.

ஊர்க்காரர்கள் ஒரு 50 பேர் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். காவல்துறையினர் சென்றார்கள், வண்டியை எடுத்தார்கள், காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் சரி தான். வண்டி யாருடையது, என்ன கலர், வண்டியின் பதிவு எண் என்பதெல்லாம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். எந்த தேதியில், எத்தனை மணிக்கு வண்டி எடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சுரேஷ் இறந்த 5,6 நாட்கள் கழித்து காலை 8,9 மணிக்கு வண்டியை எடுத்தார்கள். சுரேஷ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எல்லாருமே எனக்கு உறவு தான். காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் போட்டேன் என்றால் வண்டிக்காக தான் போட்டேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சில சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல.

7 முதல் 10 எதிரிகள் தரப்பில் 1 முதல் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.